2013 ஏப்ரல் 8]

கனிவான கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 புதிய அங்கன்வாடி மையங்கள் அமைக்க உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களுடைய சார்பிலே கோடானுகோடி நன்றிகளையும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

168—

பெண்கள் கலைக் கல்லூரி

***22856—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், குளித்தலையில் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், குளித்தலையில் ஏற்கெனவே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில்—அங்கே பெண்கள் அதிகம் படித்துக்கொண்டு வருகிறார்கள். அந்தக் கல்லூரியில் மொத்தம் 1,077 மாணவ, மாணவியர் படித்துக்கொண்டு வருகிறார்கள். இவற்றில் பெண்கள்

மட்டும் 712 பேர் படிக்கின்றனர். ஆண்கள் 365 பேர் படிக்கிறார்கள். ஆண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 344 பெண்கள் அதிகமாகப் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லையோ, அதுபோன்ற பகுதிகளில் தேவைக்கு ஏற்ப கல்லூரிகளைத் துவக்கி வருகின்றார்கள். அப்படி எதிர்காலத்தில் தேவையிருப்பின், அங்கே கல்லூரியைத் துவக்குவது பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆலோசனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் ஒரு கலைக் கல்லூரி இயங்கிக்கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு குளித்தலையைச் சுற்றி இருக்கின்ற கிராமப்புறங்களில் மட்டும் கிட்டத்தட்ட 7, 8 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. குளித்தலையில் இருக்கின்ற பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மட்டும் கிட்டத்தட்ட 2,000 பேர் பயில்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளிலே மட்டும் 800 மாணவிகள் பயில்கிறார்கள். இப்படி அந்தப் பகுதியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் படிப்பதால், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிக் கல்வித் துறையிலே ஏற்படுத்தி வருகின்ற புரட்சியின் காரணமாகவும், கொடுத்து இருக்கின்ற சலுகைகள் காரணமாகவும், இப்போது அதிகமான பெண்கள் கல்லூரிகளிலே படிக்க முன்வருகின்ற காரணத்தினாலும் இருக்கின்ற கல்லூரிகளிலே இடம் போதாது என்கின்ற காரணத்தாலும், அருகில் எந்தக் கல்லூரியும் இல்லாத காரணத்தாலும், அவர்கள் திருச்சிக்கும், கரூருக்கும் செல்ல வேண்டிய நிலையிருப்பதாலும், தற்போது இருக்கின்ற கல்லூரிகளில் இருபாலரும் படிப்பதால் மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு இதை எடுத்துச் சென்று, மகளிருக்கு மட்டும் தனியாக ஒரு கல்லூரியை அமைத்துத் தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுஅமர்கின்றேன்.

2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது 651 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், அரசுக் கல்லூரிகளாக 62–ம், அரசு உதவிபெறும் கல்லூரிகளாக 133–ம், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக 35–ம், சுயநிதிக் கல்லூரிகளாக 421 என கணக்கிட்டுப் பார்த்தால், மொத்தம் தமிழகத்தில் 651 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதிலே, அவர் சார்ந்திருக்கின்ற கரூர் மாவட்டத்தில் மட்டும் 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. 7 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகமொத்தம் 9 கல்லூரிகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. பொதுவாக இருபாலர் கல்லூரியைப் பொறுத்தவரையில், மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, ஏற்கெனவே சொன்னதைப்போல, அங்கே இருக்கக்கூடிய கல்லூரியில் 33% அடிப்படையில் பெண்கள் படிக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அதோடுமட்டுமல்ல, அந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படுகின்றபோது அங்கே 5 பாடத் திட்டங்கள் மட்டும் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு சென்ற ஆண்டு மேலும் கூடுதலாக அங்கே உயர் கல்வி படித்தவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தோடு 6 புதிய பாடங்கள் துவக்கிவைக்கப்பட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல தமிழ்நாட்டில் மொத்தம் 21 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பெண்களுக்கு மட்டுமே உள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இது தெரியும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சொல்கிறபோது பெண்களுக்காக மட்டும் இரண்டு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு ஏற்கெனவே சொன்னதைப்போல, எதிர்காலத்தில் தேவை இருப்பின் அந்தப் பகுதியிலும் அதுபோன்ற கல்லூரியை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆராய்ந்து

முடிவெடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை ஆராய்ந்து, தேவை இருப்பின் செய்து தருவேன் என்று கூறி இருக்கின்றார்கள். கண்டிப்பாக தேவை இருக்கும் என்பதை வலியுறுத்தி, நிச்சயமாக அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

169—

மேம்பாலம்

4805*—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நாராயணகுப்பம் முதல் மலைமஞ்சனூர் வரை மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, பென்னர்—போந்தை சாலை கிலோ மீட்டர் 4/0—ல் நாராயணகுப்பம்—மலைமஞ்சனூர் செல்ல பாம்பாறு குறுக்கே 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்கெனவே இருந்த தரைப் பாலத்திற்கு மாற்றாக